மீண்டும் அமையும் இந்திய கூட்டரசாங்கம்
இந்திரா காங்கிரஸ் அவசர ஆலோசனை

தேர்தல் முடிவுகள் வெளிவரும் இந்நிலையில் இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை பலம் பெறுவது சந்தேகமே எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஆட்சியை அமைக்க தகுதியை காங்கிரஸ் பெற்றுள்ளது. இந்நிலையில் மீண்டும் இந்தியாவில் கூட்டரசியலே ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று அவசரமாக கூடிய இந்திரா காங்கிரஸ் செயற்குழு முடிவுகள் அனைத்தும் வெளியான பின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர். கூட்டரசியலை அமைக்கும் நிலை தோன்றினால் பாராளுமன்ற எத்தனித்திலும் கூட்டுச்சேர மாட்டோம் என காங்கிரஸ் பிரமுகர் தெரிவித்தார். எனினும் ஆதரவுடனான கட்டை நிராகரித்து விடுவதற்கில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை காங்கிரஸ் அரசு அமைக்க இடது சாரிகளும் ஆதரவளிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இடது சாரிகளின் ஆதரவு — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4 : 50

புரட்சி

முரசு 05 ஒலி 202 பிரசோற்பத்தி ஆனி 04 (18-06-1991) செவ்வாய்

மேற்கு வவுனியாவில் மோதல்
23 படையினர் பலி 60 பேர் காயம்

12 போராளிகள் வீரமரணம்

வவுனியாவில் இருந்து மடுப்பகுதியை நோக்கிச் செல்ல முயலும் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும்போர் நடைபெற்றுவருகிறது.

வவுனியா குருக்கள் மடத்திற்கும் சின்னதம்பனைக்கும் இடையில் உள்ள பிரமனாழங்குளம்பகுதியில்இருந்து இராணுவத்தினர் நேற்றுமுன் தினம் மன்னார் வீதியூடாக மடுப்பக்கமாக முன்னேறினர்.

இவர்களுக்கு உதவியாக இரு பொம்மர்கள் இரு ஹெலிகள், மை-12 விமானம் என்பன தாக்குதல் நடாத்தின.

இராணுவத்தை எதிர்த்து புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர். இம்மோதலில் பலியான இப்பாய்களின் சடலங்களை புலிகள் மீட்டுள்ளனர்.

இராணுவத்தினரிடமிருந்து ரி-56-2, 203 ரிவோல்வர் -1, ஷெல்கள் - 6 என்பனவும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இம்மோதலில் இராணுவத்தினரில் 23 படையினர் பலியாகினர் 60 படையினர்காயமடைந்தனர் என ஏதென்னி செய்திகள் தெரிவித்தன.

இம்மோதலில் கப்டன் வீரன் உ. குமார் - முருங்கன், லெப். நடுலேன் கா. சந்தசாமி - புளியங்குளம், லெப். செல்வம் ப. விமலதாஸ் -பருத்தித்துறை, லெப். கபில் ம. சசிகரன் - ஏழாலை, லெப். — 04 ஆம் பக்கம் பார்க்க

கொக்கட்டிச்சோலை படுகொலை

முழுமையான ஆணைக்குழு ஜனாதிபதி தீர்மானிப்பார்!

கொக்கட்டிச் சோலை படுகொலை குறித்து பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளச் சென்ற குழுவுக்கு தலைமையான விசாரணைக் குழு கொழும்பு திரும்பியது.

இது தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் வழங்கியுள்ளதாகவும் அறிக்கையைப் பொறுத்தே படுகொலை குறித்து விசாரிக்க முழுமையான ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொக்கட்டிச்சோலையில் பலியான 128 பொதுமக்களின் பெயர் விபரங்கள் தொண்டர் அதரவாளர்களால் திரட்டப்பட்டுள்ளன.

வீரமரணம்

கடந்த 14 ஆம் திகதி பூவரசங்குளம் பகுதியில் நடைபெற்ற மோதலில் மேஜர் — 04 ஆம் பக்கம் பார்க்க

புதிய இந்தியப் பிரதமர் குறித்து சோனியாவுடன் ஆலோசனை

இந்திரா காங்கிரஸ் ஆட்சி யமைப்பது பற்றி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி திருமதி சோனியா காந்தியுடன் ஆலோசிக்கப்படும் என அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பாக்ரோம் ஜாக்கர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பதவியை ஏற்க திருமதிகாந்தி மறுத்தவிடபோதிலும் பிரதமரை தெரிவு செய்ய ஒரு மித்த கருத்தை எட்டுவதற்குரிய முயற்சிகளில் சோனியாவிடம்கேற்றாலோசிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

செங்கலடி பிளவில் புலிகள் - இராணுவம் மோதல்

வவுனியா செங்கலடி பிளவு பகுதியில் இராணுவத்தினருடன் விடுதலைப்புலிகள் கடும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

முகாமில் இருந்து அரசமரம் தோணவில் நடைபெற்ற இம் மோதலில் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

புலிகள் தரப்பில் லெப். கதா(நாகேந்திரன் வவுனியா) 2 ஆம் லெப் ராமன் (த.இருஷ்ணமூர்த்தி ஓமந்தை), குணாளன் (க.ரவிச்சந்திரன் மடுகுளம்), கபிரதன்(இ. துஷ்டிக் பாலற்குளம்) ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

பி. பி. ஸிக்கு ஜெயலலிதா பேட்டி

தமிழ் போராளிகளை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

"தமிழகத்திலுள்ள அனைத்து இலங்கைத் தமிழ்ப் போராளிகளையும் தமிழகத்தில் இருந்து வெளியேற்ற அ.தி.மு.க அரசு முயற்சி எடுக்கும்"

இவ்வாறு தமிழக முதலமைச்சராக வரவுள்ள செல்வி ஜெயலலிதா நேற்று பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதேவேளை தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தொடர்ந்தும் தமது அரசு உதவி வழங்கும் எனக் — 04 ஆம் பக்கம் பார்க்க

முத்தமிழ் விழாவில்

சைக்கிள் திருடர் புலிகளிடம் அகப்பட்டனர்

நேற்று முன்தினம் முத்தமிழ் விழா நடைபெற்றுக் கொண்டிருந்த போது சைக்கிள்களில் உதிரிப்பாகங்களை திருடிய நாசகர் விடுதலைப் புலிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்

இவர்கள் பெக்கு கமேர போன்றவற்றைக் கழற்றிக் கொண்டிருந்தபோதே புலிகளிடம் அகப்பட்டனர்.

களவாடப்பட்ட பொருட்கள் இவர்களிடம் கழுத்தில் தொங்கவிடப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு விடப்பட்டன. 79

பயிற்சி ஆசிரியர்கள் இன்று கண்டன ஊர்வலம்

கரைநகரில் இயங்கிவரும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த இரு பயிற்சி ஆசிரியர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இன்று காலை கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இந்த ஊர்வலம் திருநெல்வேலியில் இயங்கும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாக செல்லும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரசாங்க அதிபர் கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படும். 33

அநுராதபுரத்தில் தாக்குதல்
5 படையினர் பலி; ஆயுதம் மீட்பு

அநுராதபுரத்தில்வாகனத்தில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்தியதாக்குதலில் 5 படையினர் பலியாகினர்.

நேற்றுக்காலை பலகடவை என்ற பகுதியில் உள்ள இரு முகாம்களுக்கு இடையில் வாகனத்தில் சென்ற படையினர் மீதேதாக்குதல் நடைபெற்றது

படையினரிடமிருந்து ரி-56-3, ரவைகூடுகள் - 7, ரி - 81 - 1, ரவைகூடுகள்-4, ஐ எம் ரவைகள்-400 தே ஆர் கைக்குண்டு -4 என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

10 ஆம் நாள் முத்தமிழ் விழாவில் மக்கள் பாடலுடன் முடிவடைந்தது

முத்தமிழ் விழாவின் பத்தாம் நாள் நிகழ்ச்சி நேற்று முன்தினம் யாழ் நகரில் நடைபெற்ற போது இறுதியாக அதிகாலை 5 மணிக்கு போர்க்கால புரட்சிகர பாடல்கள் இடம்பெற்றன. — 04 ஆம் பக்கம் பார்க்க

சந்திரசேகர் ராஜினாமா குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு

இடைக்கால பிரதமராக இருந்துவந்த சந்திரசேகர் தமது ராஜினாமா குறித்து நேற்று ஜனாதிபதி வெங்கட்ராமனுடன் பேச்சு நடாத்தி — 04 ஆம் பக்கம் பார்க்க

★ முத்தமிழ் விழா பிரகடனம்;

ஆண்டுதோறும் சித்திரைத்திங்களில் முத்தமிழ் விழா இடம்பெறும்;

ஓவியக்கூடம், கூத்துப்பட்டறை, ஒலிப்பதிவுக்கூடம் தமிழீழத்தில் அமையும்

முத்தமிழ் விழாவை ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழாவாகப் பத்துத் தினங்களுக்கு நடாத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப்பட்ட முத்தமிழ் விழாப் பிரகடனத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப் பிரகடனத்தில் உள்ள மேலும் சில முக்கிய விவரங்கள் வருமாறு:

தமிழீழத்தின் சகல பகுதியிலும்

இந்த முத்தமிழ் விழா அடுத்துவரும் ஆண்டுகளில் வன்னி, திருமலை, மன்னார், மட்டக்களப்பு எனத் தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் கொண்டாடப்படும்

ஆண்டு தோறும் மாமனிதர் விருதுகள்

ஆண்டு தோறும் முத்தமிழ் விழாவின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் தமிழீழ மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் பணிபுரிந்த மாமனிதர்கள் பதின்மரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தமிழீழத் தேசிய விருதுகள் வழங்கப்படும்.

கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு

அரச தமிழ்க் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் புறக்கணித்து ஒதுக்கி வரும் இவ்வேளையில் விடுதலைப் புலிகள் இயக்கம் அவர்களுக்கு ஊக்கமும் உதவியும் வழங்கும்.

சிற்பஓவியக்கூடம் அமைக்கப்படும்

சிற்ப ஓவியக் கலைஞர்களுக்கென சிற்ப ஓவியக் கூடங்களும், தமிழ்க் கூத்துக் கலைஞர்களுக்கென கூத்துப்பட்டறையும், இசைக் கலைஞர்களுக்கென ஒரு ஒலிப்பதிவுக் கூடத்தையும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் அமைக்கும். அத்துடன் எழுத்தாளர்கள் கவிஞர்களின் ஆக்கங்களை வெளிக் கொணரும் பொருட்டு விரைவில் இரு இலக்கிய இதழ் வெளியிடப்படும்.

ஊக்குவிப்பு போட்டிகள் தொடரும்

சிறந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள் பாவலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மதிப்பளித்து ஊக்குவிக்கும் முகமாக சிறுகதை, நாவல், பாடல், இராமியக் கலைகள், கூத்து போட்டிகள் நடாத்திப் பரிசு வழங்கப்படும்.

எங்கும் எதிலும் தூயதமிழ்

அருந்தமிழ் மொழியை மாற்றுமொழி ஊடுருவல்களிலிருந்து பாதுகாத்து எங்கும் எதிலும் தூய தமிழ் மொழியைப் பயன்படுத்த முயற்சியெடுக்கப்படும். தமிழ் மொழியை தூய்மைப்படுத்த பக்கலைக்கழக மட்டத்தில் ஒரு தனித்துறை தோற்றுவிக்கப்பட வேண்டும். வேற்று மொழிச் சொற்களுக்குப் பதிலாக மாற்றுத் தமிழ்ச் சொற்களை உருவாக்க வல்லுநர்களைக் கொண்ட குழுக்கள் துறைதோறும் அமைக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைமுறைப்படுத்தப்வேண்டும்

மொழிமீட்புப் போர்; அதுவும் முக்கியம்

தமிழீழ மீட்புப் போரில் நாம் முழு வெற்றி காணும் நாளில் எமது மொழியை மாற்று மொழிக்கலப்புகளிலிருந்தும் ஊடுகல்களிலிருந்தும் வேறுபடுத்தும் மொழிமீட்புப் போரிலும் நாம் வெற்றி கண்டாக வேண்டும்.

எழுச்சிஇலக்கியம் இன்று அவசியம்

மண்மீட்புப் போருக்கு விறு சேர்க்கும் இலக்கியங்களையும் கலைப் படைப்புக்களையும் எமது எழுத்தாளர்கள், கலைஞர்கள் வழங்க முன்வர வேண்டும் அது எமது எழுத்தாளர்கள் - கலைஞர்களினது கடமையாகும் எமக்கு, இன்று தேவையானது விடுதலை இலக்கை நோக்கிய இலக்கியங்களும், கலைப் படைப்புக்களுமே தவிர வேறும் பொழுது போக்கும் கலைகளும் இலக்கியங்களுமல்ல எழுத்தாளர்கள் இவற்றைப் படைப்பதை விட்டு புரட்சிகரப் போராட்ட உணர்வை வெளிப்படுத்தக் கூடிய எழுச்சி இலக்கியங்களைக் காலத்தால் அழியாத காவியங்களைப் படைக்க முன்வர வேண்டும் அது போன்றே பாவலர்களும் தமிழினத்திற்கு எழுச்சி யூட்டக் கூடிய பாடல்களை ஆக்க, பாட முன்வரவேண்டும்.

விடுதலை வழியில் அணிதிரள வேண்டும்

கலைஞர்கள் எமது உயிரினும் மேலான விடுதலைப் போரைவெற்றியின் திசைவழி நோக்கி இட்டுச் செல்லக் கூடிய கலைப்படைப்புக்களை ஆக்கவேண்டும். தமிழீழத்தின் முழு வளர்ச்சி விடுதலை நோக்கிய பாதையில் போராளிகளுடன் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரண்டு விடுதலை நோக்கி வழிநடக்க வேண்டும். (74)

தேசிய வேதாகம புதிர்ப்போட்டியில் நல்லூர் யாக்கோபு பங்கு சாம்பியன்

இலங்கை வேதாகமச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய வேதாகமப்புதிர்ப் போட்டி சென்றவாரம் கொழும்புமெதடிஸ்த கல்லூரியில் நடைபெற்றபோது நல்லூர் பரியாக்கோபு ஆலயம் சிரேஷ்ட, பிரிவிலும் கனிஷ்டபிரிவிலும் முதலாம் இடங்களைப் பெற்று இவ்வருடத்துக்கான வெற்றிக்கேடயத்தை பெற்றுக் கொண்டது.

இப் போட்டியில் வக்ஷ்ன் சந்திரனைத் தலைமையாகக் கொண்ட கனிஷ்ட பிரிவில் கிறிஸ்ரீன் சபாரத்தினம், சுபோதினி மேதர், அமலன் சரவணமுத்து ஆகியோரும், சிரேஷ்ட பிரிவில் இருஷியா மயில்வாகனத்தை தலைமையாகக் கொண்ட குழுவில் சமினா-சந்திரன், நோவலின் பாக்கியநாதன், துஷ்பந்தன் காராளசிங்கம் ஆகியோரும் பங்கு பற்றினர்.

கனிஷ்ட பிரிவில் கிறிஸ்ரீன் சபாரத்தினமும் சிரேஷ்டபிரிவில் இருஷியா மயில்வாகனமும் அகில இலங்கைரீதியில் அதிதிறமைக்குரிய வெற்றிக் கேடயத்தையும் அதிதிறமைச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டனர். (33)

பள்ளிமுனைக்கு படகுச்சேவை

தற்போது விடத்தல்தீவிலிருந்து மன்னார் பள்ளிமுனைக்குப் படகுப்பயணம் நடைபெற்று வருகின்றது

இதுவரை காலமும் இலுப்பைக்கடவையில் இருந்தே பள்ளிமுனைக்குப் படகுப் பயணம் நடைபெற்று வந்தது.

தனிநபருக்கும், சைக்கிளுக்கும் தற்போது ரூபா 150 கட்டணமாக அறவிடப்படுகிறது. முன்பு இலுப்பைக் கடவையில் இருந்து ரூபா 300 அறவிடப்பட்டுவந்தது. (17)

ஒருவர் பலி

கோப்பாய் பாலத்தில் லொறி ஒன்று குடைசாய்ந்ததில் ஒருவர் பலியானார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்த இச்சம்பவத்தில் துரைராசசிங்கம் நிசாந்தன் (16 வயது) என்பவரே பலியானவராவார். மேலும் மூவர் காயமடைந்தனர். (79)

எல்லே போட்டி: கோப்பாய் சாம்பியன்

யாழ்மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு அணிகளுக்கிடையிலான 'எல்லே' போட்டிகள் நேற்று முன்தினம் பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் யாழ்மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எஸ்.குணரத்துரை தலைமையில் நடைபெற்றபொழுது சேன் பற்றிக்ஸ்கல்லூரி அதிபர் வண பிதா லைக்கேல் யோசப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சம்பிரதாய முறைப்படி போட்டிகளைத் தொடக்கிவைத்தார்.

இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் கோப்பாய் உ.அ.அ.பிரிவு அணி சங்கானை உ.அ.அ.பிரிவு அணியை 11:10 என்ற ஒட்ட அடிப்படையில் தோற்கடித்து இவ்வருட யாழ்மாவட்ட சாம்பியன் ஆனது-

விளையாட்டுத்துறை அதிகாரி இருபாகரன் நெறிப்படுத்திய இப் போட்டிகளுக்கு தீர்ப்பாளர்களாக கே.டபிள்யூ விமலராஜன் வி.வைரமுத்து ஆகியோரும் உதவி தீர்ப்பாளர்களாக திருமதி ஏ எவ். கே ரூ சிங்கம் கப்ரின் டீ.ஏ எம் குணசிங்கம் கே.நாகேந்திரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)

ஈராண்டு நினைவலைகள்

மின்னலைப் போலத் தோன்றி — மின்னலைப் போல ஒளிவிசி—மின்னலைப் போல மறைந்து விட்டது.....



தாயின் மடியில் 27 — 02 — 1972

தாயக மண்ணில் 19 — 06 — 1989

செல்வன் சண்முக உதயவர்மன் (பேபி)

(மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித விஞ்ஞானப் பிரிவு உயர்தர வகுப்பு மாணவனும், வா/கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும்)

பள்ளிப் படிப்பிலே எம்முடன்
பாசமுடன் பழகியவனே
கணக்கைத் தந்தவுடன்
கண நேரத்தில் செய்தாயே
'வட்ட இயக்கத்தை' நீர்ச் சக்கரம் கழலவைத்து
வடித்தத் தந்தாயே
பொறியியலாளன் என்று சொன்னாயே-மின்
பொறி போல மறைந்தாயே
கண்ணாடி என்றுனை அழைத்தோம் எம்
கண்ணீர் நாடியில் நிற்கவிட்டுச் சென்றாயே.

நிழல்வடிவில் நினைவுகளில்
நிதம் உன் நினைவுகளால் வாடும்

நண்பர்கள்
தாவடி, சந்தர்மடம்.

06063

ஆறாம் மாத நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்

18. 06. 1991 அன்று நடைபெறும்

மகளிர்படை இராணுவத்தளபதி
— மேஜர் தாரணி —
சுப்பிரமணியம் மதிவதனி
அத்தாய், பூநகரி.

தாயின் மடியில் 20—02—1968 தாயக விடியில் 22—01—1991

பொங்கி எழுந்தாய் சினத்துடன் அன்று - பல
போர்க்களம் கண்டாய் புன்னகையோடு
செங்குருதி சிந்தியே செகத்தை மீட்க
சேர்ந்தாய் வீர மறவர் படையில்
அடிமைப்பகை எம் தமிழீழம் கண்டு
அணியைத் திரட்டினாய் எதிரியை விரட்ட
விடியலைக் காண்போம் என்றே விருப்புடன்
விரைந்தாய் பலாலிப் பொறுப்பேற்று கம்பளைக்களத்தினை நோக்கி—உன்
வீரம் உயிர்த்து நின்றது அன்று
வேங்கைகள் உள்ளம் சிலிர்த்தது அன்று — கடும்
சோரி களத்தினிலே பாய வைத்தாய்
கயவர்கள் கூட்டத்தை அழித்து நின்றாய்
பெண்புலியாக நீ உறுமியே நின்று
வெண்நிற வானத்தை செந்நிற மாக்கி
கண் இமை மூடும் கணத்தினில் உன் உயிரை
மண் மகள் மடியில் நிரந்தரம் சேர்த்தாய்.

உன் பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்

06062

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி கதிரவேலு சுந்தராம்பாள்
(இளைப்பாறிய ஆசிரியர்)

பூவுலகில் 03. 09. 1928 பொன்னுலகில் 30. 06. 1990

திதி: 19. 06. 1991

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா உங்கள் புன்னகை தவழும் இனியமுகம் எம் கண்களில் தெரிகின்றதே. உங்கள் இனிய குரல் ஓசை எம் காதுகளில் ஒலிக்கின்றதே அம்மா, எம்மை நீங்கள் ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்று ஆண்டு ஒன்று ஆகிறது. எம்மை வென்றாலும் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தெய்வமே! எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்புக்கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

திகிரி விநாயகர் கோவில் வீதி,
செம்மியகுறிச்சி,
பூநகரி.

06058

★ வெரித்தாஸ் விமர்சனம்

கொக்கட்டிச்சோலை படுகொலை இராணுவத்தின் திட்மிட்ட செயலே!

கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவம் தற்செயலானதொன்றல்ல, ஸ்ரீலங்கா இராணுவத்தின் நன்கு திட்டமிடப்பட்ட படுகொலைகளே இவை என பிலிப்பைன்ஸில் இருந்து ஒலிபரப்பாகும் 'வெரித்தாஸ்' வானொலி தனது விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளது.

சம்பவத்தில் 200 குடிமக்கள், அதிலும் பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளும் வெட்டியும் சுட்டும் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் கொல்லப்பட்டுள்ளனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றுள்ளனர்.

கண்ணிவெடிச் சம்பவத்தினால் ஆத்திரமுற்ற ஒரு சில இராணுவத்தினரே இக் கொலைகளைச் செய்ததாக ஸ்ரீலங்கா அரசு சாக்குப் போக்கு சொல்ல முற்படுகிறது

கொக்கட்டிச்சோலையையும், அதனை அண்டிய கிராமங்களையும் பெருமளவு இராணுவத்தினர் சுற்றி வளைத்து எவரும் தப்பிச் செல்ல முடியாமல் அரண் அமைத்து இப்படுகொலைகளைப் புரிந்துள்ளனர்.

அத்துடன் ஆலயொன்றில் 40பேர் உயிருடன்கொழுத்தப்பட்டுள்ளனர், கண்ணிவெடியினால் ஏற்பட்ட கிடங்கில் 16 ஆண்கள் வெட்டிக் கொல்லப்பட்டு போடப்பட்டனர், அருகிலிருந்த பாடசாலையில் கடமையிலிருந்த பல ஆசிரியைகள் கற்பழிக்கப்பட்டிருக்கின்றனர் பிள்ளைச் செஞ்சிலுவைச் சங்கமோ வேறு எவருமோ அப்பகுதிக்குள் பிரவேசிக்க முடியாதவாறு தடுத்துவிட்டு சடலங்களைப்படையினர் அப்புறப்படுத்தியிருக்கிறார்கள்.

இதனை ஒருசில இராணுவத்தினர் மட்டும் சம்பந்தப்பட்ட தற்செயலான சம்பவமென்று ஸ்ரீலங்கா அரசு சாக்குப் போக்கு சொல்லியுள்ளது. இது ஒரு திட்டமிட்ட, தமிழர்களுக்கு எதிரான படுகொலையே.

இவ்வாறு 'வெரித்தாஸ்' தனது வாராந்த விமர்சனத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ்ப்பகுதிக்கும் நன்னை வாய்ப்பு! கரையிலிருந்தும் பெறலாம் மின்சாரம்!!

கடல் அலையிலிருந்து நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முறையில் இலகுவான, அதிக செலவில்லாத் செய்யக்கூடிய புதிய முறையொன்றை யப்பான் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி 16 மீற்றர் உயரமும், 13 மீற்றர் அகலமுமுடைய துவாரங்களையுடைய கொங்கிறீட் அறையொன்றினுள் சுழலும் பொறிகளைக் கொண்டு அந்த அறை கடலினுள் கரையை அண்டிய பகுதியில் அமிழ்த்தப்படும். துவாரங்களினூடாக அறையினுள் செல்லும் நீர் பொறியை சுழல வைப்பதினால் இம்முறையின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

இப்புதிய முறையின் படி இயங்கும் மின் நிலையமொன்று இந்தியாவில் திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த கொங்கிறீட் அறைகளை துறைமுக தடுப்புச் சுவர்களாகவும் பயன்படுத்தி இரட்டிப்புப் பயன் பெற முடியும்.

கடலினால் சூழப்பட்டுள்ள எமது தமிழ்ப்பகுதியில் கரையினில் அமைக்கக்கூடிய இப்புதிய முறையின் மூலம் எதிர்காலத்தில் போதியளவு மின் சக்தி யைப் பெற முடியும்.

மரண அத்தாட்சிப்பத்திரமின்றி நஷ்டஈடு வழங்க அரசு இணக்கம்

கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட தமிழ்க் குடிமக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென அரசு அறிவித்திருக்கிறது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட திருமணமானவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும், திருமணமாகாதோருக்கு 25 ஆயிரம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்படவுள்ளன.

மரண அத்தாட்சிப் பத்திரத்தைக் கோராமலேயே இந்த நஷ்டஈட்டை மரணித்தவர்களின் பின் உரித்தாளர்களுக்கு வழங்கவும் சம்மதிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட பெரும்பாலானோரின் சடலங்கள் இராணுவத்தினரால் எவருக்குமே தேசியாமல் எரிக்கப்பட்டு விட்டதனால் மரண அத்தாட்சிப்பத்திரத்தை உடனடியாகப் பெற முடியாத நிலை உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்தோர் வீடமைப்பு நிதிக்காக தென்மராட்சியில் 'இசைமாலை'

இடம்பெயர்ந்து வந்த தென்மராட்சியிற் குடியேறியோருக்கான வீடமைப்பு நிதிக்காக விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இம்மாதம் 22ஆந் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இசை மாலை நிகழ்ச்சியை நடாத்தவுள்ளது

இந்நிகழ்ச்சியின்போது 'இந்தமண் எங்களின் சொந்த மண்' புகழ் சாந்தன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் வழங்கும் எழுச்சி காத்தான் நாடகமும் இடம்பெறவுள்ளது.

(ப 5)

மகோற்சவம்

நேற்றுத்திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானமீசாலை வடக்கு-தம்பர்குளம் அருள்மிகு திருநீலகண்டப்பிள்ளையார் ஆலய இரதோற்சவம் 25 ஆம் திகதி காலையும், பூங்காவனத் திருவிழா 27ஆம் திகதி பிற்பகலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பூனைத்தோடுவாய் கிராமத்தில் முதியோர் பாடசாலை

வடமராட்சி கிழக்கின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பூனைத்தோடுவாய் என்னும் கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்றும் முதியோர் பாடசாலை ஒன்றும் நடாத்தப் பட்டு வருகின்றது.

இக்கிராமத்தில் கணிசமான நாற்பது குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இங்குள்ள பிள்ளைகள் எவ்வித கல்வி வசதியும் அற்று இருப்பதன் காரணமாக வடமராட்சி கிழக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் இந்த ஏற்பாடுகளை செய்துள்ளனர். (43)

எரிமலை வெடிப்பு, நிலநடுக்கத்தால் மணிலா ஒலிபரப்புக்கள் பாதிப்பு

பிலிப்பைன்ஸில் எரிமலை வெடிப்பு அபாயத்தையடுத்து ஏஞ்சல் நகரிலிருந்து இரண்டு லட்சம் மக்கள் அவசர அவசரமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதிகளவான மக்கள் இடம் பெயர்ந்து வருவதனால் அங்கு நகரவீதிகளில் பெரும்போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எரிமலையிலிருந்து நேற்று சாம்பலும், தீக்குழம்பு மண்ணும் அப்பகுதியில் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. நிலநடுக்கமும் அங்கு ஆரம்பித்துள்ளது.

எரிமலை வெடிப்பையடுத்து 60 மைல் தூரத்திலுள்ள மணிலா சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. மணிலாவிலிருந்து இடம் பெறும் ஒலிபரப்புக்களும் எரிமலை வெடிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஞ்சாப்பில் 22 ஆம் திகதி ஊரடங்கு; ரயிலில் சுடப்பட்ட அனைவரும் இந்துக்களே.

பஞ்சாப்பில் வாக்குப்பதிவு இடம்பெறவுள்ள 22 ஆம் திகதி அங்கு தமக்காக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், எவரும் அன்றைய தினம் வீடுகளை விட்டு வெளியே வரக்கூடாதெனவும் சீக்கிய தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாப்பில் தேர்தலில் வாக்களிப்பேர், வாக்களிப்புக்கு உதவுவோர், தேர்தலில் போட்டியிடுவோர் அனைவருக்கும் தண்டனை விதிக்கப்படுமென ஏற்கனவே அறிவித்துள்ளமையும், இதுவரை அங்கு 20 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமையும் தெரிந்ததே.

இதேவேளை பஞ்சாப்பில் கடந்த சனிக்கிழமை ரயிலில் வைத்துகொல்லப்பட்ட அனைவரும் இந்துக்கள் என நற்பொழுது தெரியவந்துள்ளது. ரயிலில் பயணம் செய்த சீக்கியர்களை தப்பிப் போகுமாறு அறிவித்துவிட்டு, இந்துக்களை மட்டும் தெரிந்தெடுத்து அவர்களையே சீக்கிய தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுணாவில் அலங்கார வளைவுக்கு தென்மராட்சியில் முதல் பரிசு

முத்தமிழ் விழாவை முன்னிட்டுத் தென்மராட்சிப்பகுதியில் நிற்றாரவையினால் அமைக்கப்பட்ட அலங்கார வளைவுப் போட்டியில் நுணாவில் மத்தி நிற்றாரவையின் அலங்கார வளைவு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதற்காக 5000 ரூபா பெறுமதியான பரிசு வழங்கப்படும் எனப் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர் நிற்றாரவையினால் அமைக்கப்பட்ட அலங்கார வளைவு இரண்டாம் இடத்தையும், மீசாலை கிழக்கு நிற்றாரவையினால் அமைக்கப்பட்ட அலங்கார வளைவு மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

பேசாலை திறந்தவெளி முகாமில் 1350 பேர் தங்கியுள்ளனர்

மன்னார் பேசாலை திறந்த வெளி முகாமில் 400 குடும்பங்களைச் சேர்ந்த 1350 பேர் தற்பொழுது தங்கியுள்ளனர்.

மன்னார் நாவட்டத்தின் பல பாகங்களையும் சேர்ந்த தமிழ் மக்கள் இங்கு இடம் பெயர்ந்து தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

குளங்கள் புனரமைப்பு

இறுபோகப்பெரிச்சுச்சுக்கு நீர் பெறக்கூடியவாறு யாழ் மாவட்டத்திலுள்ள குளங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் தலா ஐந்து குளங்கள் அதிகளவு நீரைத் தேக்கக் கூடியவாறு ஆழமாக்கப் பட்டு, துப்புரவு செய்யப்படவுள்ளன.

அத்துடன் இக் குளங்களிலிருந்து விவசாயக் காணிகளுக்கும் தடையின்றி நீர்விநியோகம் செய்யக் கூடிய வகையில் வாய்க்கால்களும் சீரமைக்கப்படவுள்ளன. (74)

அதிககாலம் வாழும் ஆற்றல் பெண்களுக்கே அதிகம்!

உலகிலேயே அதிகமான வருடங்கள் உயிர் வாழ்பவர்கள் குடிமக்களான ஜப்பானியர்கள்தான் எனக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானியர்களுக்கு அடுத்ததாக இந்தப் பெருமையை சுவிட்ஸர்லாந்து நாட்டவர்கள் பெறுகின்றனர்.

ஜப்பானில் ஆண்கள் சராசரி 80 வயது வரையும் பெண்கள் 82 வயது வரையும் உயிர்வாழ்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. சுவிட்ஸர்லாந்தில் ஆண்கள் சராசரி 74 வயது வரையும், பெண்கள் 81 வயது வரையும் உயிர் வாழ்கின்றனர்.

பொதுவான கணிப்பின் படி உலகில் பெண்களே அதிககாலம் உயிர் வாழ்வதாக அறியப்பட்டிருக்கின்றது அதிக காலம் உயிர் வாழ்வதற்கு மனித உடலில் புதிய கலன்கள் உருவாக்கப்படல் அவசியமாகும். அதற்குப் புரோஜஸ்டீன் சத்து அத்தியாவசியமானதாகும் ஆட்டுப்பால் அருந்தும் பழக்கமுடைய பலரும் அதிக காலம் வாழ்ந்தமை இக்கணிப்பின் மூலம் அறியப்பட்டுள்ளது.

நாளை ஆர்ப்பாட்ட ஊர்வலம் அரச அதிபரிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடு

நாளை 19ஆம் திகதி வலிவடக்கு புனர்வாழ்வுக்கழகம் நடாத்த உள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளன.

காலை 8 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாகும் இவ் ஊர்வலம் காங்கேசன்துறை வீதிவழியாக கோக்குவில் சந்தியை அடையும்.

கோக்குவில்இவ்ஊர்வலத்தோடு தாவடி, இணுவில், உடுவில் மானிப்பாய் சுதுமலை கோண்டாவில் பொதுமக்கள் அணியும் இணைந்து பெரும் பேரணியாக வாழ்செயலகம் சென்றடையும். அங்கு அரச அதிபரிடம் வலிவடக்கு மக்களின் நிலைமைகளை வெளிக்காட்டும் 12 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது. (ப 10)

மாநகரசபை முதல்வர்களுக்கு 7500 ரூபா மாதாந்தப் படி!

புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மாநகர சபைகளின் முதல்வர்களுக்கு 7500 ரூபா மாதாந்தப் படியாக வழங்கப்படவுள்ளது.

பிரதி முதல்வர்களுக்கு 5000 ரூபாவும், அங்கத்தவர்களுக்கு 3500 ரூபாவும் மாதாந்தப் படியாக வழங்கப்படும்.

நகரசபை மற்றும் பிரதேச சபைத் தலைவர்களுக்கு 4000 ரூபாவும், உப-தலைவர்களுக்கு 2000 ரூபாவும், அங்கத்தவர்களுக்கு 1500 ரூபாவும் மாதாந்தப் படியாக அரசினால் வழங்கப்படவுள்ளன.

● வடமராட்சி கிழக்கு பகுதியில்

முளைக் காய்ச்சல் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தீவிரமாகப் பரவிவரும் முளைக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்த யாழ் மாவட்ட மலேரியா தடைப்பிரிவு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதியில் இதுவரை 33 பேருக்கு மேல் முளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டதையடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வேகமாக பரவிவரும் மலேரியாக்காய்ச்சல், முளைக்காய்ச்சல் நோய்களைக் கட்டுப்படுத்த இப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு நோய் தடுப்புக் குளிகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ் பிராந்திய மலேரியத் தடை இயக்க வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவகுரு இப்பகுதியில் தங்கியிருந்து நோய்த்தடுப்புக்கான குளிகைகளை வழங்கி வருகிறார்.

இவருக்கு உதவியாக மலேரியாத்தடை இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 30 ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

மலேரியா நோயையும், அதிகிருந்து உருவாகும் முளைக் காய்ச்சல் நோயையும் கட்டுப்படுத்த முன்னர் வீடு வீடாக நடைமறுத்து தெளிக்கப்பட்டு வந்தது.

அண்மைக் காலமாக இத்தடை மருந்து தெளிக்கப்படவில்லை எனவும் இதனாலேயே நோய் பரவத் தொடங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 50

சனசமூகநிலைய உறுப்பினர்கட்கு முதலுதவிப்பயிற்சி வகுப்புக்கள்

'யூனிசெப்' நாபனத்தின் ஆதரவில் யாழ் - மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கு முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட சுமார் 50 உறுப்பினர்கள் இப்பயிற்சி வகுப்பிற்கு வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இப்பயிற்சி வகுப்புக்கள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இல. 107 கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ் மாநகர சபையின் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி வகுப்புக்களுக்கான நடவடிக்கைகளை யாழ் மாநகரசபையின் அனுசரணையுடன் 'யூனிசெப்' நாபனம் மேற்கொண்டுள்ளது.

முதலாம் நாள் நிகழ்ச்சிகளை யாழ் மாநகர ஆணையாளர் பொ. பரமசிவம் ஆரம்பித்து வைப்பார்கள். பயிற்சியில் பங்குபற்றும் உறுப்பினர்களுக்கு, பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன 47

தமிழக கட்சி நிலைவரம்

தேர்தல் நடைபெற்ற இடங்கள் - 232

வெளியான முடிவுகள் - 232

அ. தி. மு. க	- 163
இ. காங்கிரஸ்	- 61
தி. மு. க	- 01
மார்க்சிய கம்யூனிஸ்ட்	- 01
இந்திய கம்யூனிஸ்ட்	- 01
பாரம்பரிய மக்கள் கட்சி	- 01
அ. தி. மு. க திருநாவுக்கரசு அணி	- 02
சுயேட்சை	- 01

அ. தி. மு. க பெரும்பான்மைப்பலமுடைய ஆட்சியை அமைக்கும் நிலையை எட்டிவிட்டது.

விசர்நாய்க்கடி தடுப்பூசிக்கு ஆஸ்பத்திரிகளில் தட்டுப்பாடு

யாழ் மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் விசர்நாய்க்கடிக்குரிய ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் விசர்நாய்க்கடிக்கு இலக்கானவர்கள் இந்த மருந்து இன்றி உயிராபத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மருந்தின் அவசிய தேவைகள் பற்றி சுகாதார அமைச்சுக்கும் தொண்டர் நிறுவனங்களுக்கும் எடுத்துக் கூறியும் எதுவித பயனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஆவணி மாதம் புத்தம் ஆரம்பித்தது முதல் இந்த மருந்துக்கு தட்டுப்பாடு நிலவிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோல வேறு சில அத்தியாவசிய மருந்துகளையும் கொழும்பிலுள்ள சுகாதார திணைக்களம் அனுப்பிவைக்க வில்லையெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

காரைநகரில் உள்ளோர் நிலைமைகள் ஆராயப்படும்

காரைநகரில் சிக்கியுள்ளவர்களின் நிலைவரம் குறித்து அறிந்து அவர்களின் உறவினர்களுக்கு விவரங்களைத் தெரிவிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாண அமைச்சுடன் பேச்சு நடாத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகரில் உள்ள வயோதிபர்கள் கடும் சுகயீனமுற்றவர்கள் ஆகியோரை மீட்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். u11-83

பயிலுநர் ஆசிரிய நியமனத்தில் மோசடிகள் என புகார்

தென்மாராண பாடசாலைகளில் பயிலுநர் ஆசிரியர் நியமனங்களில் பல மோசடிகள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடிகள் பற்றி விசாரிப்பதற்கு குற்ற புலனாய்வுத்துறை பகுதியினரை தென்மாராண அமைச்சு நாடியுள்ளது.

தென்மாராண கல்விப் பணிப்பாளர் சகலகலாலூரி அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள பயிலுநர் ஆசிரியர்களின் நியமனக் கடிதங்கள் 1988ல் எழுதப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அதிபர்களினால் இந்த விடயம் மாகாண அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்தே இந்த நியமனங்கள் குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். 33

ராஜீவுக்கு பாரத்ரத்னா

இந்தியாவின் அதி உயர் விருதான பாரத்ரத்னா கொல்லப்பட்ட ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

மரணத்துக்கு பிந்திய இவ்விருதை சுதந்திர போராட்ட வீரரும் அரசியல் வாதியுமான சர்தார் வல்லபாய் பட்டேலும் பெறுவதாக இந்திய ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

தமிழ் இளைஞர் கைது

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்த கறுவாப்பட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இந்தியப் பாராளுமன்ற தேர்தல் கட்சிகளின் நிலைவரங்கள்

தேர்தல் நடைபெற்றவை -511

வெளியான முடிவுகள்	350
இந்திரா காங்கிரஸ்	186
பாரதிய ஜனதா	74
ஜனதாதள்	21
மார்க்சிய கம்யூனிஸ்ட்	19
அ. தி. மு. க.	11
சிவசேனா	3
தெலுங்குதேசம்	9
சமாஜ்வாதி ஜனதா	1

இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை பலம் பெறவேண்டுமானால் 250 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்பது இக்கு குறிப்பிடத்தக்கது.

கருணாநிதி பதவி துறப்பார்?

தமிழக சட்டப்பேரவைக்கு தி. மு. க. சார்பில் அதன் தலைவர் மு கருணாநிதி மட்டுமே தெரிவாகியுள்ளார். இதனால் அவர் தனது பதவியை ராஜினாமா செய்யலாம் எனக் கூறப்படுகிறது.

அமெதியில் மீண்டும் தேர்தல்

இதேவேளை காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி வெற்றி பெற்ற அமெதி தொகுதியில் மீள் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

தமிழ்...

குறிப்பிட்ட தொகுதியிலா, உலகில் எங்கு தமிழர்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுமோ அவர்களுக்கு நீதி கிடைக்க தமது அரசு முயற்சி செய்யும் எனவும், இதற்கென தமிழ்-நிதிடம் இருந்து அவர்கள் உரிமையையும் சலுகைகளையும் பெற வசதியளிக்கப்படும் என்றும் கூறினார்.

10ஆம் நாள்...

"இந்த மண் எங்கள் சொந்த மண் "என்ற பாட்டை சாந்தன் பாடிய போது மக்களின் கரகோசம் வானைப் பிளந்தது.

"புலிகளின் தாகம் தமிழீழம்..... ..."என்ற பாட்டை கடைசியாக அவர் பாடிய போது மக்களும் சேர்ந்து பாடினார்கள் 4 55 க்கு விழாவாவும் இனிது நிறைவுற்றது. 79

மீண்டும்...

வெளியில் இருந்தே கிடைக்கும் எனவும் அரசினுள் இணையப்போவதில்லை எனவும் கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் உறுதிபடக் கூறியுள்ளன.

சந்திரசேகர்...

நியுள்ளார்.

சந்திரசேகரின் சமாஜ்வாதி ஜனதா இம்முறை தேர்தலில் படுதோல்வி கண்டுள்ளது தெந்ததே.

மேற்கு...

ஜொர்ஜ் ச. ஸ்ரீகந்தராசா - உசன், 2ஆம் லெப். ரவி ந. கணேஷ் - காங்கேசன் துறை, 2ஆம் லெப். நிசாந்தன் மா. ஜெயராசா - சாவகச்சேரி, யூடி இ. யூடி - குருநகர், மடத்தின் ஆ. சித்திரவேல் - மன்னார், வல்லவன் கரவி- மன்னார், ஜிம்கெலி பா. ஜெயகிஷ்கர் - மட்டக்களப்பு, புலிகளின் தீவிர ஆதரவாளர் ஜெயதாஸ் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

வீரமரணம்...

இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். பிரேமன் (தி. நவேந்திரன் கனகராஜன் குளம்), ராஜு (பொ. இக்கரன், நாவற்குழி) ஆனையிறவில் நடைபெற்ற மோதலில் கிக்கி (தி. உதயராசா கிளிநொச்சி) வீரமரணமடைந்தனர்.

காலமானார்

சபாரத்தினம் தர்மராஜா

அராலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாய் வடக்கை வதிப்பிடமாகக் கொண்டவருமான சபாரத்தினம் தர்மராஜா அவர்கள் 17-06-1991 (திங்கட்கிழமை) காலமானார்.

இவர் காலஞ் சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும் தெய்வலட்சுமி, மனோகரி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகபோதரன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), மகேந்திரன் ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன், அமலன், சாரதிகன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை (18.06.91) செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய் இந்து மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி மகேந்திரன் மகள்

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

06065

நூறாவது மேடை

கதகளி பரதநாட்டியம்

நீராவியடி வண். வடகிழக்கு சனசமூகநிலைய நிதி உதவிக்காக

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் 14-7-91 பி. ப. 3 மணிக்கு

கதகளி பரத கலாமணி இலங்கை வேந்தன் நடனக் குழுவினரின்

'கதகளி பரதநாட்டியமும்'

100 வது மேடையாக



பண்டாரவன்னியன்

(சரித்திர நாடகம்)

(பண்டாரவன்னியனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி) 06064

அன்னளிப்பு: மில்க்வைற்

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்லியங்காடு டச்சு வீதி "லக்ஷ்மி" பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 18. 06. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.